

துணை முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி கோபி சட்டமன்றத் தொகுதியில் கலைஞர் நூலகம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவேங்கடம் ஏற்பாட்டில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நூலகத்தை திறந்து வைத்தார். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், மண்டல பொறுப்பாளரும், மாநில இளைஞரணி துணை செயலாளருமான பி.எஸ்.சீனிவாசன், கோபி நகர மன்ற தலைவர் என்.ஆர்.நாகராஜ், துணை அமைப்பாளர்கள் சையது நாசிர், கே.எஸ்.பிரகாஷ், கார்த்திகேயன், வினோத், வைத்தீஸ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

### திண்டிவனத்தில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அரிசி - நலத் திட்ட உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் வழங்கினார்!

திண்டிவனம், டிச. 13 - பெஞ்சல் புயல் கனமழையால்பாதிக்கப்பட்ட விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு தலைமைக் கழகம் மூலம் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப் பட்டன.

இந்த நிவாரணப் பொருட்கள் திண்டிவனம் நகராட்சி 7, மற்றும் 8 வது வார்டுகளில் புயல்மழை யால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திண்டிவனம் நகர மன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டக்டர் ப.சேகர் கலந்து கொண்டு திண்டிவனம் நகராட்சி 7 மற்றும் 8 ஆகிய வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அரிசி உள்ளிட்டநலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில் திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், நகர அவைத் தலைவர் ரவிச்சந்திரன், நகர பொருளாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்டம் மொரப்பூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.ரத்தினவேல் ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஏழை எளியோர்க்கு 150 புடவை, 50 வேட்டிகள், வழங்கி சிறப்புரை ஆற்றினார். விழாவில் தொகுதி பார்வையாளர் செல்லதுரை, மாவட்ட துணை செயலாளர் சி.கிருஷ்ணகுமார்,மற்றும் மாவட்ட, ஒன்றிய, கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### கலசப்பாக்கம் தொகுதி – கலசப்பாக்கம் ஒன்றியம்

# எலத்தூர் - மோட்டூரில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை!

## சட்டப்பேரவையில் பெ.சு.தி.சரவணன் கோரிக்கை!

சென்னை, டிச.13 - கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் ஒன்றியம், எலத்தூர்-மோட்டூரில் கட்டப்பட்டுள்ள அரசுப் போக்குவரத்துப் பணிமனை திறக்கப்படுமா? என்று கலசப்பாக்கம் தொகுதி உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் கேள்வி எழுப்பினார்.



இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**பெ.சு.தி.சரவணன்:** கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் ஒன்றியம், எலத்தூர் - மோட்டூரில் கட்டப்பட்ட அரசுப் போக்குவரத்துப் பணிமனையை பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** கலசபாக்கம் தொகுதி, எலத்தூர் - மோட்டூரில் அமைக்கப்பட்டிருக்கின்ற போக்குவரத்துப் பணிமனையானது முழுமையாக கட்டி முடிக்கப்படவில்லை. இன்னும் அதில் பல பணிகள் முடிவுற்றால்தான், பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியும். எனவே, தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அதற்கான நிதியை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கினால் அந்தப் பணிகளை முடிக்கலாம் என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**பெ.சு.தி. சரவணன்:** கலபாக்கம் சட்டமன்றத் தொகுதி, எலத்துர்மோட்டூரில் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பணிமனை இன்னும் பயன்பாட்டிற்கு வரவில்லை. தமிழ்நாட்டில் எத்தனையோ போக்குவரத்துக் கழகங்கள் இருந்தாலும், திருவண்ணாமலை மண்டலம்தான் போக்குவரத்துக் கழகங்களில் அதிக இலாபம் ஈட்டித்தரும் மண்டலமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. திருவண்ணாமலையை தனி Corporation ஆக, அறிவிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, குறைந்தபட்சம் அந்தப் பணிமனையை டயர் யூனிட் ஆகவாவது ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** திருவண்ணா மலையைத் தனி போக்குவரத்துக் கழகமாக அறிவிக்கவேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். அதனை, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பொருளாகத்தான் நான் பார்க்கிறேன். ஏற்கெனவே, விழுப்புரம் கோட்டத்திலே, திருவண்ணாமலை மண்டலம் என்று பிரித்ததற்கு முழுமுதல் காரணமாக, அண்ணன் நேரு அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது அதனைப் பிரித்தார். இப்பொழுது அதனைப் பிரிக்கவேண்டுமென்று உறுப்பினர் கோருகிறார். ஆனால், போக்குவரத்துக் கழகங்களுடைய நிதிநிலை இப்பொழுது அந்த அளவிற்கு இல்லாத காரணத்தினால் எதிர்காலத்தில் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, அந்தப் பணிமனையை டயர் யூனிட் ஆக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். அதிலே இன்னும் தரைதளம் அமைக்கப்படவேண்டிய பணி இருக்கிறது. அதேபோல, மின்வசதி செய்ய வேண்டிய பணிகள் இருக்கின்றன. நிதிநிலையை ஆய்வுசெய்து, அதிகாரிகளுடன் கலந்துபேசி, அவற்றைச் செய்ய இயலுமா என்பது குறித்து ஆய்வுசெய்து, வாய்ப்பு இருந்தால் அப்பணிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பெ.சு.தி. சரவணன்:** அந்தப் பணிமனையானது ஒரு பாதுகாக்கப்பட்ட பாதுகாப்பு சுற்றுச்சுவருடன் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களே, அது நெடுஞ்சாலைத் துறையை யொட்டி இருப்பதால், அது சமூக விரோதிகளி ன் கூடாரமாக மாறுகிறது. அதன் அருகில் வில்வாரணி நட்சத்திரக் கோயில் என்று புகழ்பெற்ற கோயில் இருக்கிறது. சமூகவிரோதிகளின் நடமாட்டம் அதிகம் இருப்பதால், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலினை செய்து, அந்தப் பணிமனையை பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, திருவண்ணா மலை மாவட்டத்திற்கு நான் சுற்றுப்பயணம் செய்தபோது, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை அதனைப் பார்வையிடச் சொன்னார்கள். விரைவில் அதைப் பார்வையிட்டு, அதிகாரிகளைக்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### நெய்வேலி தொகுதியில் – தென் மலட்டாற்றில் –

# காமாட்சிப்பேட்டையில் தடுப்பணை கட்ட வேண்டும்!

## சட்டப் பேரவையில் – நெய்வேலி சபா.இராஜேந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, டிச. 13 - தென்பெண்ணையாற்றில் வருகின்ற அதிக வெள்ளம் தென் மலட்டாற்றில் புகுந்து நெய்வேலி தொகுதி பாதிக்கப்படுவதால் , காமாட்சிப் பேட்டையில் ஒரு தடுப்பணை கட்டிட வேண்டும் என்று பேரவையில் உறுப்பினர் சபா.இராஜேந்தி ரன் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து விவாதம் வருமாறு:

**சபா. இராசேந்திரன்:** சமீபத்தில் வந்த ஃபெஞ்சல் புயல் மழையினால் கடலூர் மாவட்டம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. பூகோள ரீதியிலான அமைப்பினால் மேலே உள்ள 7 மாவட்டங்களிலுள்ள மழைநீர் வடிகால் பகுதியாகக் கடலூர் மாவட்டம் இருக்கிறது. அடிக்கடி பேரிடர் பாதிக்கின்ற பகுதியாகவும் கடலூர் மாவட்டம் உள்ளது. எனவே, கடலூர் மாவட்டத்திற்கென சிறப்புத் திட்டங்களைத் தீட்டி, சிறப்பு நிதியை ஒதுக்கி, அந்த ஆற்றின் கொள்ளளவை அதிகரிக்கின்ற வகையில் கரைகளை உயர்த்தி, அதை பலப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

வெள்ள சேதத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட முதல்வர் அவர்களுக்கும், இரண்டே தினங்களில், இரண்டு முறை கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து மக்களுக்கு ஆறுதலையும், ஆதரவையும் கொடுத்த துணை முதல்வர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



தென் பெண்ணையாற்றில் இருக்கின்ற இந்த அதிக வெள்ளம் தென் மலட்டாற்றில் புகுந்து நெய்வேலி தொகுதியில் உள்ள திருவாமூர், காமாட்சி பேட்டை, எலந்தம்பட்டு, சிறுவத்தூர், ஏரிப்பாளையம், செம்மேடு, கருக்கை போன்ற கிராமப் பகுதிகளில் குடியிருப்புப் பகுதிகளிலும், அதேபோல வயல் பகுதிகளிலும் பெரிய சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தப் பகுதியினுடைய நீண்டநாள் கோரிக்கையான காமாட்சிப்பேட்டையில் ஒரு தடுப்பணையை கட்டிக்கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையினையும் இந்த நேரத்திலே வைக்கின்றேன். இந்தப் பகுதி Critical zone என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. Exploited zone ஆக மாறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள நிலத்தடி நீர் உப்பாக மாறிக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த அவசியத்தைக் கருதி அந்த இடத்திலே காமாட்சிப்பேட்டையில் ஒரு தடுப்பணை யைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

**பேரவைத் தலைவர்:** நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**துரைமுருகன்:** உறுப்பினர் சபா. இராசேந்திரடைய யோசனை, நல்ல யோசனை. கோரிக்கையும் நல்ல கோரிக்கை. இரண்டையும் அரசு கவனிக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு – கோவை மாநகர்

# மாவட்ட இளைஞர் அணி - மணியகாரன் பகுதி சார்பில் கிரிக்கெட் போட்டி!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் பரிசு வழங்கினார்!

கோவை, டிச. 13 - கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்டம், தி.மு.க. இளைஞரணி மணியகாரன்பாளையம் பகுதி தி.மு.க. இணைந்து நடத்திய, கோவை காந்திமாநகர் மைதானத்தில் நடைபெற்ற, மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் பரிசளித்து, வாழ்த்தினார்.

மணியகாரன்பாளையம் பகுதி செயலாளர் அஞ்சுகம் பழனியப்பன் தலைமையில்,மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா. தனபால் வரவேற்புரையில், இளைஞரணி துணை அமைப்பாளர் க.மணிகண்டன் ஏற்பாட்டில், மாநகர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே.பி. திருமலைராஜா,துரை.பிரவீண்குமார், கோவை அருண்,தே.லாராபிரேம் தேவ்,சி.எம்.எஸ்.மசூது முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கழகத்தினர் பங்கேற்றனர்.

வட்டக்கழக செயலாளர்கள் 19 வது வார்டு பி.குமார்,20 வது வார்டு ஆர்.புகழேந்தி,25 வது வார்டு ஆர்.தாமோதரன், மாமன்ற உறுப்பினர்கள் 25 வது வார்டு தவமணி பழனியப்பன் 20 வது வார்டு அ.மரியராஜ் மாநகர் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ஆர்.கே.சுரேஷ்குமார், பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு, வர்த்தக அணி துணை அமைப்பாளர் ரமேஷ், பகுதிக்கழக நிர்வாகிகள் சுந்தர்ராஜன்,வசந்தா மணி, கருப்புசாமி, பிரதீப், பன்னீர்செல்வம், ராமச்சந்திரன், பகுதி இளைஞரணி நிர்வாகிகள்

சுரேஷ், பிரேம், சுபாஷ், பிரபாகரன், ராம்ராஜ், செந்தில்குமார்,புகழேந்தி, அஜித்,தினேஷ், பரத், கார்த்தி, குமார், ஐயப்பன், ராஜ், கார்த்திக்,மதன் குமார், அன்பு, பிரனீத், ரஞ்சித், வெங்கடேஷ், கிருஷ்ணன், ரியாஸ், சுரேந்திரன், முத்துக்குமார், ஜெயக்குமார்,சிவலிங்கம், பொத்திராஜ், சந்தோஷ், குமார், பிரதீஷ், சரவணன், சத்யராஜ், பப்பி, கணேஷ், மகேஷ்,ஹரி, நாகராஜன்,பிரகாஷ், எஸ்.மணி ,முருகன், பெரியதம்பி, சூர்யா, சீனி, பிரவீன், ஸ்ரீ சூர்யா, குமார்,

தீபக்,சதீஷ், பூபாலன், சுதர்சன்,

மாரிமுத்து, நவீன், நிவாஸ், விக்னேஷ், சரத்,

கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்டம் பொறையார் நிவேதா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவியர் தி.மு.க. சார்பில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்ற வினாடி–வினா போட்டியில் பங்கேற்று மாநில அளவில் முதல் பரிசான ரூபாய் 10 லட்சத்திற்கான காசோலையைபெற்றனர் இதை அடுத்து பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பரிசு பெற்ற மாணவிகளான எஸ்.தர்ஷினி, ஏ. வள்ளிக்கண்ணு, கே.சிட்டிபர்விஷா ஆகியோரை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வாழ்த்தினார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் எம் அப்துல் மாலிக், அமிர்த விஜயகுமார், பஞ்சு குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ வின்செண்ட் கென்னடி, பள்ளியின் முதல்வரும் தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர் சுகுணா சங்கரி குமரவேல் மற்றும் பலர் உள்ளனர்.



கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றிய தொடக்க பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகள் மற்றும் நோட்டு புத்தகங்களை தெற்கு ஒன்றிய செயலாளர் அன்பு (எ) மருதமுத்து வழங்கினார். அப்போது தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# எழும்பூர் தொகுதி ஆர்.கே.புரம் பயனாளிகளுடன் கலந்துரையாடல் கூட்டம்!

சென்னை, டிச. 13 - எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புரசைவாக்கம், பிரிக்ளின் சாலையில் உள்ள இராதாகிருஷ்ணபுரம் திட்டப் பகுதி1 இல் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 23.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 168 வீடுகளைக் கொண்ட புதிய அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டப்பட்டு, அக்குடியிருப்பினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 29.10.2024 அன்று காணொலிக் காட்சி வழியாகத் திறந்து வைத்தார்கள்.

அப்புதிய குடியிருப்பில் வீடு ஒதுக்கீடு பெற்றவர்கள் பயனாளர் தொகையாக 1.50 இலட்ச ரூபாயைத் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்குக் கட்ட வேண்டியுள்ள நிலையில், அது குறித்து கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகள் முன்னிலையில் வீடு ஒதுக்கீடு பெற்றவர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் 06.12.2024 அன்று நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறையூர் ந.குணசீலன்

### டிசம்பர் 13 (2015)



**இளமைக் காலம் தொட்டு கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்.**

**தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையுடன் இறுதிவரை வாழ்ந்தவர்.**

**1993ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினராகவும், 1997ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2000ஆம் ஆண்டு முதல் பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், 2005ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2010ஆம் ஆண்டு முதல் இறுதி வரை பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**